இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 295– திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 22– திங்கள்கிழமை 05 ஜூன் 2023 – மதுரை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 295:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 22 - Monday 05 June 2023 - Madurai 8 Pages ₹ 5.00

## ரயில் விபத்து: ஒடிசா சென்ற தமிழ்நாடு குழுவினருடன்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீட்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையிலான குழுவினர் காணொலி மூலம் விளக்கம்!

**சென்னை, ஜூன் 5-**

**ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு உதவிடும் வகையில் ஒடிசா சென்ற குழுவினருடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக மீட்புப் பணிகளின் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (3.6.2023) மாலை ஒடிசா சென்ற தமிழ்நாட்டு குழுவினருடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளோர் குறித்தும், மீட்புப் பணிகளின் நிலவரங்கள் குறித்தும் முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

ஒடிசா இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்கு தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளை செய்திடவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்திடவும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், மற்றும் ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் ஒடிசா அனுப்பி வைக்கப்பட்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.6.2023) தலைமைச் செயலகத்தில், ஒடிசா சென்ற தமிழ்நாட்டு குழுவினருடன் காணொலிக் காட்சி வாயிலாக மீட்புப் பணிகளின் நிலவரங்கள் குறித்தும், விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில், காணொலிக் காட்சி வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, ஆகியோரும், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோர் விபத்து நடந்த பாலசோர் என்ற இடத்தில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகளை கண்காணித்து உதவி வருகின்றனர். மற்றொரு குழுவான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் ஆகியோர் ஒடிசாவில் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் இரயில் விபத்தில் உயிரிந்த மற்றும் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் விவரங்களை சேகரித்து வருகின்றனர்.

இந்நிலையில், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான குழுவினர், பாலசோர் அரசு மருத்துவமனைக்குச் சென்று, விபத்தினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களைப் பார்த்து வந்ததாகவும், ஆனால் அந்த மருத்துவமனையில் தமிழ்நாட்டைச் நேர்ந்த எவரும் இதுவரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

மேலும், கட்டாக்கில் உள்ள எஸ்.வி.பி. மருத்துவமனையில், விபத்தில் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை அவர்கள் சேகரித்து வருவதாகவும், தற்போது வரை அந்த மருத்துவமனையில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை எனத் தெரிய வந்துள்ளதாகவும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

பாலசோர் நகரத்தில் உள்ள 4 இடங்களில், விபத்தில் இறந்த 237 நபர்களின் உடல்கள் வைக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், தற்போதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள சுமார் 70 சடலங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை என்று அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், குழுவினர் தெரிவித்தனர்.

தென்னக இரயில்வேயின் பயணிகளின் முன்பதிவுப் பட்டியல்படி, விபத்தில் சிக்கிய இரயில்களில் பயணம் செய்தவர்களின் விவரங்கள், அவர்களது உறவினர்களிடம் சரிபார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு அமைச்சர்கள் தலைமையில் ஒடிசா சென்றுள்ள குழுவினர், மேலும் சில தினங்கள் அங்கு தங்கியிருந்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக சென்னை வந்தடைவதை உறுதி செய்திட வேண்டுமென்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இக்கூட்டத்தில், சென்னையில் உள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில், இதுவரை பெறப்பட்ட விவரங்கள் குறித்தும், அதன் செயல்பாடு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், ஒடிசா இரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில், சென்னையில் உள்ள மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளதாகவும் அரசு அலுவலர்கள் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

நேற்று மாலை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி ஆகியோர், ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் பாதுகாப்பு, மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ உதவிகள் குறித்து கலந்துரையாடினர்.

நேற்று மாலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், காணொலிக் காட்சி வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி ஆகியோரும், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## கோரமண்டல் ரயில் கோர விபத்து: அதிகாரிகளுடன்

# ஒடிசாவில் 2வது நாளாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை!

## மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டோரிடம் நலம் விசாரித்தார்!

**புவனேஸ்வர், ஜூன் 5-**

**ஒடிசாவில் 2வது நாளாக தங்கி இருந்து அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ். சிவசங்கர், அதிகாரிகள் கொண்ட தமிழ்நாடு குழு ஒடிசா மாநில அதிகாரிகளுடன் மீட்புப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் முறை குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.**

**பாலசோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பயணிகளிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் நலம் விசாரித்து உரிய சிகிச்சை அளித்திட மருத்துவர்களிடம் வலியுறுத்தினார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

ஒடிசா மாநில ரயில் விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை மீட்பது, நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஒடிசாவுக்கு நேற்று முன்தினம் (3.6.2023) சென்றனர்.

### ஒடிசா அதிகாரிகளுடன் ஆலோசனை!

இரண்டாவது நாளாக நேற்று (4.6.2023) ஒடிசாவில் தங்கியிருந்து அம்மாநில அதிகாரிகளுடன் இணைந்த அக்குழுவினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

மேலும் பல்வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் தமிழ்நாட்டு அதிகாரிகள் சந்தித்து ஆறுதல் கூறினர்.

### முன்பதிவு செய்யாத பெட்டியில் பயணம் செய்தவர்கள் நிலை!

இந்நிலையில் கோரமண்டல ரயிலில் முன்பதிவு செய்யாத பெட்டியில் பயணம் செய்த 12 பேர் நிலை குறித்து அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சிவசங்கர் மற்றும் தமிழ்நாட்டின் அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஒடிசா அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

உறவினர்கள், உட்பட யாரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 பேரில் 4 பேர் உயிருடன் இருப்பதாக குழுவில் இடம் பெற்றுள்ள அதிகாரிகள் கூறினர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீதமுள்ள 8 பேர் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளதால் அவர்களை கண்டறியும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் அதிகாரிகள் நேற்று ஒடிசாவின் பாலசோர், ஃபக்கீர் மோகன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்றுவரும் பயணிகளிடம் நலம் விசாரித்தனர். அப்போது உரிய சிகிச்சை வழங்கிடுமாறு பாலசோர் மருத்துவமனை மருத்துவர்களிடம் அமைச்சர்கள் வலியுறுத்தினர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (04.06.2023) ஒடிசா மாநிலத்தின் சிறப்பு நிவாரண ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற மீடபுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் மருத்துவ உதவி மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஒடிசா மாநிலத்தின் தலைமைச் செயலாளர் பிரதீப் குமார் ஜெனா அவர்களுடன் கலந்தாலோசித்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஒடிசா மாநிலத்தின் வளர்ச்சி ஆணையர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி அனு கார்க், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி சித்ரா ஆறுமுகம் மற்றும் ஒடிசா மாநில உயர் அலுவலர்கள் உள்ளனர்.